முருகப்பெருமான் துணை

**மகான் மெய்கண்டதேவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.08.2023**, சனிக்கிழமை

1. அவதார ஞான பிரம்மமே
ஆனந்த ஞான சொரூபமே
அவனி காக்கும் அம்சமாக
அவதரித்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது யாளிதிங்கள்
வரங்களென உபயதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 02 ம் நாள், 19.08.2023, சனிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை மெய்கண்டதேவர் யானும்
அருளுவேன் அகிலம் உயர்வுபெற
ஆசிதந்து அரங்கமகான் காட்டும்
அறநெறி அன்புகலந்த தயவு நெறி
4. நெறியாம் சன்மார்க்க நெறியை
நிலவுலகோர் பின்பற்றி வர
அறியாமை அகன்று மேவி
ஆசாபாசம் வழி அகப்படா
5. அகப்படா பொறிபுலனை வென்று
அபயமென தயவே வடிவாக
செகத்தினில் சேவை ஆற்றி
சிறப்பறிவுக்கான வழிமுறை தன்னை
6. தன்னையே குருவருள் என்னும்
தக்க ஆற்றல்வழி அடைந்து
என்னப் பிறவி இதுவென சலிப்பு
எக்கணமும் கொள்ளா இனிபிறவேன் என

7. என மெய்ஞான பலம்தனை
ஈதூழே அரங்கன் ஆசிபட
ஞானமாக அடைந்து வருவோர்
ஞானிகளாக மாறுவது உறுதியப்பா
8. அப்பனே ஆணவ மாயைதனை
அழித்துமே திருவருள் தரும்
காப்பே குருவடி ஆகும்
கவனமுறத் தொடர்ந்து வர
9. வருகவே ஆஸ்தி அணிகலன்
வாகை புகழ் வளர்ச்சி எல்லாம்
வெறுமையே என உணர்ந்து
வேலவனை காணும் வழிமுறை
10. வழிமுறை குருவடியே எனக் கண்டு
வழிமொழிந்து தொடர்ந்து வர
பழிபாவத் துன்பகதி அனைத்தும்
பறந்தோடி பேரின்ப வழிகிட்டி
11. வழிகிட்டி வந்த நோக்கம்
வகையறிந்து அரங்கன் வழி
அழியாமை பெறுவது உறுதியப்பா
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—